தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# அனைத்துலகத் தேர்வு
# 2011

# தமிழ்மொழி

## ஆண்டு 7

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று

அ) திருக்குறள் ஆ) சிலப்பதிகாரம் இ) மூதுரை ஈ) நல்வழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. விபுலாநந்தரின் இளமைப் பெயர்

அ) மயில்வாகனன் ஆ) சின்னத்தம்பி

இ) சாமித்தம்பி ஈ) வில்லவராயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. எந்த மன்னனுக்கு அஞ்சி போர்த்துக்கேயர் பெங்சூற்றர் பைல் கோட்டைகளைக் கட்டினர்.

அ) சங்கிலியன் ஆ) கயிலைவன்னியன்

இ) பண்டாரவன்னியன் ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. அழுக்காறு உள்ளவனிடம் இது இருக்காது

அ) ஆக்கம் ஆ) சினம் இ) பகை ஈ) வேலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. மூன்றாம் வேற்றுமை உருபு

அ) கு ஆ) இன் இ) ஐ ஈ) ஆல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. வானத்து விண்மீன்கள் போல் புவி மீது வித்தை காட்டுவன

அ) எறும்புகள் ஆ) மின்மினிப்பூச்சிகள்

இ) தேனீக்கள் ஈ) வண்ணத்துப்பூச்சிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. உழவரைச் சிறப்பிக்கும் விழா

அ) பொங்கல் விழா ஆ) ஆடிப்பிறப்பு விழா

இ) நத்தார் விழா ஈ) வாணி விழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. குற்றமுள்ள நெஞ்சு ______________________

அ) விறு விறுக்கும் ஆ) குறுகுறுக்கும்

இ) புறுபுறுக்கும் ஈ) சுறுசுறுக்கும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. சுட்டெழுத்து அல்லாதது

அ) அ ஆ) எ இ) உ ஈ) இ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. வாழைப்பழம் இதன் புணர்ச்சி வகை

அ) கெடுதல் புணர்ச்சி ஆ) தோன்றற் புணர்ச்சி

இ) திரிதற் புணர்ச்சி ஈ) இயல்புப்புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. இதை அடக்காவிட்டால் சொற்குற்றத்திற்கு ஆளாவோம்.

அ) நாவை ஆ) பசியை இ) கோபத்தை ஈ) மனத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பின்வருவனவற்றுள் துளைக்கருவி

அ) மேளம் ஆ) யாழ் இ) குழல் ஈ) முரசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. 34 ஆண்டுகள் வன்னியை ஆண்ட மன்னன்

அ) எல்லாளன் ஆ) கயிலைவன்னியன்

இ) சங்கிலியன் ஈ) பண்டாரவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பின்வரும் எழுத்துகளில் வல்லினம்

அ) ங் ஆ) ச் இ) ய ஈ) ர

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. உவமையணிக்கு எடுத்துக்காட்டு

அ) மதிமுகம் ஆ) முகமதி

இ) நெஞ்சக்கல் ஈ) மொழித்தேன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. முகம் திரிந்து நோக்கினால் குழைவது

அ) விருந்து ஆ) மருந்து இ) கரும்பு ஈ) அனிச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பின்வருனவற்றுள் இரட்டைக்கிளவி

அ) அல்லும் பகலும் ஆ) பென்னம்பெரிய
இ) மெல்லமெல்ல ஈ) படபட

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கஞ்சமகள் எனக் குறிப்பிடப்படுவது.

அ) மல்லிகை ஆ) தாமரை இ) முல்லை ஈ) ஆம்பல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஒரு செய்தியைக் கூறுவது

அ) வினாச்சொல்லியம் ஆ) ஏவற்சொல்லியம்
இ) கூற்றுச்சொல்லியம் ஈ) மெய்ப்பாட்டுச்சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. கதிரமலை எனப்படுவது

அ) பொம்பரிப்பு ஆ) பூநகரி இ) கந்தரோடை ஈ) ஆனையிறவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. தலையைக் காத்த தமிழ் என்னும் பாடத்தில் வரும் புலவர்

அ) மோசிகீரனார் ஆ) சின்னத்தம்பிப்புலவர்
இ) ஔவையார் ஈ) சோமசுந்தரப்புலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. நல்வழி என்ற நூலை எழுதியவர்

அ) பாரதியார் ஆ) ஔவையார் இ) பாரதிதாசன் ஈ) திருவள்ளுவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஒறுப்பு என்ற சொல்லின் பொருள்

அ) மகிழ்ச்சி ஆ) சினம் இ) தண்டனை ஈ) கொடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. உயிரினங்களுக்கு இயற்கை அளித்துள்ள சூழல் தொகுதி

அ) நாடு ஆ) காடு இ) வீடு ஈ) ஊர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. இல்லறத்தார் செய்யவேண்டிய இனிய கடமைகளில் ஒன்று

அ) உதவுதல் ஆ) பணிதல்
இ) ஒன்றுகூடல் ஈ) விருந்தோம்பல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. இடையன் என்ற சொல்லின் பெண்பால்

அ) இடைச்சி ஆ) இடச்சி இ) இடைய்ச்சி ஈ) இடய்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. சிலப்பதிகாரத்தின் மறுபெயர்களில் ஒன்று

அ) ஐம்பெருங்காப்பியம் ஆ) குடிமக்கள் காப்பியம்
இ) மணிமேகலை ஈ) குண்டலகேசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. போற்றுதல் என்னும்பல்சுவைப்பாடல் புகழ்ந்து கூறுவது

அ) அந்தணரை ஆ) சான்றோரை இ) அரசரை ஈ) உழவரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. ஆட்பலம் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ) ஆட் + பலம் ஆ) ஆட்ப் + பலம்

இ) ஆ + பலம் ஈ) ஆள் + பலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. வெள்ளத்துக்கு அடங்காத வாளை மீன் பாய்ந்து ஏறியது

அ) கமுகில் ஆ) பலாவில்

இ) தென்னையில் ஈ) இஞ்சியில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, முழுவிடை தருக.

உலகெங்கும் தன் கொடி பறக்க, கடலெங்கும் மரக்கலம் விட்டு, சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்தது தமிழினம். உலகின் முதன் மொழி தமிழ். இம்மொழி தன்னிகரற்ற இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கண்டு நாகரிகத்தின் உச்சியில் இருந்தது. தமிழினம் வந்தேறிய ஆரியர்களுடைய ஏமாற்றுகளால் மூடநம்பிக்கைகளை உண்மையென ஏற்றது. தான் அவர்களை விடத் தாழ்ந்தது என்றும் நம்பியது. தாழ்ந்தவர்களுக்குத் தன் மண்ணில் வாழ்வு மறுக்கப்பட்டதால் உலகெங்கும் கூலிகளாகச் சென்றது. இந்நிலையில் 20ம் நூற்றாண்டில் தோன்றினார் ஈ.வெ இராமசாமிப் பெரியார். ஆரியத்தால் மொழியிழந்து கலையிழந்து கிடந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பினார். மூடநம்பிக்கைகளைச் சாடினார். அதற்கென ஒரு கழகம் அமைத்து தமிழ் மக்களை மூட நம்பிக்கையில் இருந்து மீட்கப் போராடினார்.

1. உலகெங்கும் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த இனம் எது?

___________________________________________

___________________________________________

___________________________________________

2. தன்னிகரற்ற இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழி எது?

___________________________________________

___________________________________________

3. யாருடைய ஏமாற்றுகளால் தமிழினம் மூடநம்பிக்கைகளை உண்மை என்று ஏற்றது?

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

4. மூடநம்பிக்கைகளைச் சாடித் தமிழினத்தைத் தட்டியெழுப்பியவர் யார்?

___________________________________________

___________________________________________

___________________________________________

5. எதில் இருந்து தமிழ் மக்களை மீட்கப் பெரியார் போராடினார்?

___________________________________________

___________________________________________

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் - ஐந்திற்கு விடை தருக.

1. தமிழகத்தில் பாஞ்சாலங் குறிச்சியின் வீரமுள்ள மன்னனாக வாழ்ந்தவன் யார்?

2. விருந்தினரை எவ்வாறு வரவேற்க வேண்டுமெனத் திருக்குறள் கூறுகிறது?

3. ஈசன் உவக்கும் இன்மலர்கள் எவை?

4. ஏழைப் புலவனுக்கு நாடாளும் மன்னன் கவரி வீசியது ஏன்?

5. மண்புழுக்களும் வண்ணத்துப் பூச்சிகளும் ஏன் அருகிப் போயின?

6. எதனால் குமரிக்கண்டம் கடலில் மூழ்கியது?

7. குரங்குகள் ஏன் இளநீரைப் பறித்து எறிந்தன?

(புள்ளிகள் 10)

4) **பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

***படிப்புடன் பண்பும் சேர்ந்தாலே***
***படிப்புக்கு அழகே சேர்ந்திடுமாம்***
***அறிவுடன் அன்பும் சேர்ந்தாலே***
***அடுத்தவர் எம்மைப் புகழ்வாராம்***
***உடுத்திடும் உடைகள் தூய்மை எனில்***
***உள்ளமும் தூய்மை பெற்றிடுமாம்.***

***கடுமைச் சொற்கள் பேசாமல்***
***கனிவாய்ப் பேசுதல் நலந் தருமாம்***
***பொய்தனைச் சொல்வது தவறாகும்***
***மெய்தனைச் சொல்வது சிறப்பாகும்***
***அறந்தனைப் போற்றுதல் நலமாகும்***
***மறவாமை நற் பலமாகும்***

1. படிப்புக்கு அழகு சேர்ப்பது எது?

___

___

2. கனிவாய்ப் பேசுவது எதைத் தரும்?

___

___

3. எப்படிப்பட்ட சொற்களைப் பேசக் கூடாது?

___

___

4. போற்றுதல் என்பதன் எதிர்ப்பொருட் சொல்லை எழுதுக.

___

___

5. இப்பாடலில் இருந்து நீர் கற்றுக் கொள்வது என்ன?

___

___

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. சொல்லிய வகைகள் நான்கின் பெயர்களையும் தந்து ஏவல் சொல்லியத்திற்கு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

______________________________

______________________________

2. தரப்பட்டுள்ள அடுக்குத்தொடர்களின் பொருள் விளங்க கருத்துள்ள சொல்லியங்கள் எழுதுக.

மெல்ல மெல்ல: ______________________________

புதுப்புது: ______________________________

மின்னிமின்னி: ______________________________

3. வல்லின மெய்கள் ஆறினையும் எழுதுக.

______________________________

______________________________

4. கீழ்வரும் வினைமுற்றுகளை பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும் மாற்றி எழுதுக.

| வினைமுற்று | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|
| படித்தான் | | |
| உண்டான் | | |
| ஓடியது | | |

5. எதிர்ப்பொருள் தருக.

நிறைவு ______________ பள்ளம் ______________

பிறப்பு ______________ தொடக்கம் ______________

இழு ______________ கோடை ______________

(புள்ளிகள் 15)

6) தரப்பட்டுள்ள பந்தியை வாழிடமொழிக்கு மாற்றுக.

Je me prénomme Karikalan. J'habite en Italie. Mon oncle est au Danemark. Il a deux enfants. Tous les deux parlent le Tamoul. Mon plus jeune oncle est en France. Ses enfants étudient dans un Tamoul Cholai. Pour les vacances d'été, je suis allé en France en avion. Et je suis allé aussi visiter la Tour Eiffel avec mon oncle. Cette tour a été construite par Alexandre Gustave Eiffel. Elle est constituée de barre de fer. Pour joindre ces fers ils ont utilisé deux mille six cent clous. Sa taille est de 324 et composés de mille six cent soixante cinq marches. Elle est composée de trois étages. Ici nous disposons dans la tour d'une poste, des magasins, et des restaurants

Mit navn er karikalan. Jeg bor i Italien. Min onkel bor i Danmark. Han har to børn. Begge to taler tamilsk. Fars lillebror bor i frankrig. Hans børn lærer tamilsk på Thamilcholai. Jeg rejste til Frankrig i sommerferien med fly. Der, har jeg været sammen med min fars lillebror for at se Eiffeltårnet. Eiffeltårnet er bygget af Alexander Gustav Eiffel. Hele dette tårn er af jern. Der er brugt femogtyve tusind søm, at fiksere jernet med. Det er 324 meter høj. Der er 1665 trappetrin. Det har tre etager. Her er der postkontor, forretninger og restauranter

My name is Karikalan. I am Living in Italy. My uncle is in Denmark. He has two children. Both of then speak Tamil. My uncle is in France. His children are studying Tamil in Tamil Cholai. For the summer holidays, I went to France by plane. Then I went too see the Eiffel tower with my uncle . The Eiffel Tower was built Alexander Gustave Eiffel. The whole tower is made of iron. To join the irons twenty six thousand nails were used. Its height is 324 meters. It has 1665 steps. It has 3 stories. Here we have a post office, shops, and food courts.

Ich heiße Karikaalen. Ich lebe in Italien. Mein Onkel, lebt in Daenemark. Er hat zwei Kinder. Beide sprechen Tamil. Mein Onkel, lebt in Frankreich. Seine Kinder lernen Tamil in der Tamilcholai. In den Sommerferien flog ich mit dem Flugzeug nach Frankreich. Dort besichtigte ich mit Onkel, den Eiffelturm. Der Eiffelturm wurde von Alexander Gustav erbaut. Dieser Turm ist ganz aus Eisen. Um das Eisen zusammenzubauen wurden 25000 Schrauben benutzt. Er ist 324 Meter hoch. Er besitzt 1665 Treppenstufen. Er hat 3 Stockwerke. Hier gibt es Postamt, Geschäfte und Restaurants.



(புள்ளிகள் 05)

Mijn naam is Karigalen. Ik woon in Italië. Mijn oom woont in Denemark. Hij heeft twee kinderen, die kunnen Tamil spreken. Mijn andere oom woont in Frankrijk. Zijn kinderen zitten op Tamilschool, waar ze Tamil leren. In de zomervakantie ging ik met de vliegtuig naar Frankrijk . Daar heb ik samen met mijn oom de Eiffeltoren bezocht. De Eiffeltoren was door Alexander Gustave gebouwd. De Eiffeltoren bestaat volkomen uit ijzeren. Om de ijzeren bij elkaar te verbinden hadden ze vijfentwintigduizend klinknagels nodig gehad. De hoogte van de Eiffeltoren is 324 meter. Die Eiffeltoren bestaat 1665 treden.
Deze Eiffeltoren bestaat uit drie lagen. In die Eiffeltoren bevinden zich onder ander postbank,winkels en restaurants.

Jeg heter Karikalan. Jeg bor i Italia. Onkelen min (broren til mora mi) bor i Danmark. Han har to barn. Begge to kan snakke tamil. Onkelen (yngre broren til faren min) bor i Frankrike. Barna hans lærer tamil på TamilCholai. I sommerferie tok jeg fly til Frankrike. Sammen med onkelen min (pappas yngre bror) fikk jeg sett Eiffeltårn. Eiffeltårnet ble bygd av Alexandre Gustave Eiffel. Dette tårnet består av jern. Det ble brukt tjuefem tusen spiker for å føye jernstykkene sammen. Tårnet er 324 meter høyt. Det er 1665 trappetrinn. Det består av tre etasjer. Her finnes det postkontor, butikker og restauranter.

Mi chiamo Karikalan. Vivo in Italia. Un mio zio abita in Danimarca. Ha due figli. Entrambi parlano Tamil. ( L'altro ) mio zio ( il fratello minore di mio padre ) vive in Francia. I suoi figli studiano Tamil a Tamil Choldi. Per le vacanze estive sono andato in Francia in Aereo e allora sono andato a vedere la Torre Eiffel con mio zio ( il fratello minore di mio padre ). La Torre Eiffel è stata costruita da Alexander Gustave Eiffel. L'intera torre è fatta di ferro. Per collegare i ferri sono stati usasti ventiseimila chiodi. E' alta 324 metri, ha 1665 scalini ed ha tre piani. Là si trovano un ufficio postale, negozi e ristoranti

(புள்ளிகள் 05)

7) 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

★ பனிகாலம்

★ தலையைக்காத்த தமிழ் என்னும் பாடற்பகுதியை உமது உரைநடையில் எழுதுக.

★ கயிலை வன்னியன்

★ புலம் பெயர் நாடுகளில் தமிழ்ப்பள்ளிகளும் தமிழ் மொழிக்கல்வியும்.

(புள்ளிகள் 20)